செ.வெ.எண். 35 நாள்: 12.09.2017

**திருநெல்வேலி மாவட்ட அறிவியல் மையத்தில் ஆசிரியர் தினவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் கேடயங்களை வழங்கினார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களை வாழ்த்தினார்.**

திருநெல்வேலி மாவட்ட அறிவியல் மையத்தில் பள்ளிக் கல்வித்துறையின் மூலம் ஆசிரியர் தின பரிசளிப்பு விழா இன்று (12.09.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு ஆசிரியர் தின விழாவையொட்டி ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, ஆய்வுக் கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, இசை மற்றும் பாட்டுப்போட்டி, உடற்கல்விப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நல்லாசிரியர் விருது பெற்று 16 ஆசிரியர்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வாழ்த்தினார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

செப்டம்பர் 5-ம் தேதி ஆண்டுதோறும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் பெற்றோருக்கு அடுத்ததாக ஆசிரியர்களே முக்கியமானவர்களாகும். ஒவ்வொருவருக்கும் ஆசிரியர்களின் ஆலோசனைகள், கவனிப்பும் நல்ல வழிகாட்டுதல்களாக அமையும். சமுதாயம் மிகச் சிறப்பான வளர்ச்சியடைவதிலும் ஆசிரியர்களின் பங்கு மகத்தானதாகும். இளைய சமுதாயத்தினரை நல்ல சரியான வழியை தேர்ந்தெடுக்க ஆசிரியர்களின் ஆலொசனைகள் முக்கியமானதாகும். ஆசிரியர் தின விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், பங்கேற்றவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த 16 ஆசிரியர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நல்லாசிரியர் விருது பெற்றுள்ளனர். அவர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன் எனப் பேசினார். தொடர்ந்து பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இவ்விழாவில் முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. தனமணி, மாவட்ட கல்வி அலுவலர்கள், (சேரன்மகாதேவி) திரு.ஜெயராஜ் (திருநெல்வேலி), திரு.ஜெயபாண்டி, மாவட்ட அறிவியல் மைய அலுவலர் திரு.நவராம் குமார், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் திரு.சந்திரகுமார், ஒருங்கிணைப்பாளர் திரு.கஜேந்திரபாபு, முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் திரு.அழகுராஜன், திரு.நாராயணன் மற்றும் அலுவலர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி